| ஈரோடு மாவட்டம் அரசிதழ் இணைப்பு | | 2017-ம் ஆண்டு ஜனவரி மாதம் |
|---|---|---|

# ஈரோடு மாநகராட்சி

## பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு

**(ஈரோடு மாநகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் 30.12.2016 -ஆம் தேதிய 7-ஆம் எண் தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டது)**

ஈரோடு மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு 2017-2018-ம் ஆண்டு முதல் 2019-2020 வரை (01.04.2017 முதல் 31.03.2020 வரை) மூன்றாண்டுகளுக்கு சுங்கம் அல்லது கட்டணம் வசூலிக்கும் உரிமையை மாநகராட்சி ஆணையாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் **15.02.2017**-ம் தேதி **புதன்கிழமை** காலை 11-00 மணி வரையில் அல்லது ஒத்திபோடும் நாளில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினம் காலை 11.30 மணிக்கு ஆணையர் அறையில் பகிரங்க ஏலமும் நடைபெறும்.

ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விருப்பம் உள்ளவர்களும், பொது ஏலத்தில் கலந்து கொள்பவர்களும், அட்டவணையில் கண்டுள்ள உரிம இனங்களுக்கு எதிரே நிர்ணயம் செய்துள்ள வைப்புத் தொகை (வங்கி வரைவோலையாக) (தேனா வங்கி தவிர) (ஆணையாளர், ஈரோடு மாநகராட்சி அல்லது Commissioner, Erode City Municipal Corporation என்ற பெயரில்) மற்றும் வங்கி உத்திரவாத சான்று அல்லது வங்கி உத்திரவாத சான்றின் தொகைக்கு இணையான வங்கி வரைவோலையாக (Demand Draft) இணைத்து, ஏலம் நடப்பதற்கு முதல் நாளன்று **14.02.2017**-ம் நாள் **செவ்வாய்கிழமை** அன்று காலை 10.00 மணி முதல் மாலை 4-00 மணி வரை, மாநகராட்சி காசாளரிடம் செலுத்தி அத்தாட்சி பெற்று கொள்ள வேண்டும். தொகை செலுத்தியதற்கான அத்தாட்சி உள்ளவர்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுக்கவும், பொது ஏலத்திலும் கலந்து கொள்ளவும் முடியும். ஒரு இனத்திற்கு செலுத்தப்பட்ட வைப்புத் தொகை மற்றும் வங்கி உத்திரவாத சான்று மற்ற இனத்திற்கு வைப்புத் தொகையாக எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. ஒரு இனத்திற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு தனித்தனியாக வைப்புத் தொகை செலுத்தவேண்டும். வங்கி வரைவோலைகள் மூலம் செலுத்தப்பட்ட அனைத்து வைப்புத் தொகைகளும், வங்கி உத்திரவாத சான்றும், அனைத்து ஏல இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் முடிவுற்று உரிமம் ஒப்படைத்த பின்னரே திருப்பிக் கொடுக்கப்படும். இதற்கு வட்டி ஏதும் கொடுக்கப்படமாட்டாது. மேற்கண்ட விபரப்படி ஒவ்வொரு இனத்திற்கும் பணம் செலுத்தியவர் அல்லது அவரது முறையான அனுமதி பெற்றவர் யாரோ ஒருவர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். ஒவ்வொரு இனத்திற்கும் பொது ஏலம் முடிந்தவுடன் அந்த இனத்திற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறக்கப்படும். பொதுஏலக் கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கேள்வி இவற்றில் எது அதிகமாக உள்ளதோ அத்தொகையை உச்ச கேள்வித்தொகையாக எடுத்துக்கொள்ளப்படும். ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் **2017-2020**-ம் ஆண்டின் ஏல அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

# ஈரோடு மாநகராட்சி
# 2017–2020 மூன்றாண்டுக்கான உரிம இனங்கள்
## அட்டவணை

| வ. எண் | ஏல இனங்கள் | திறந்து வைக்கப் பட வேண்டிய நேரம் | ஏலம்/ ஒப்பந்தப் புள்ளிக்கு செலுத்த வேண்டிய வைப்புத் தொகை | தேசிய மயமாக்கப்பட்ட வங்கி உத்திரவாத சான்று அல்லது வங்கி வரை வோலை டிமாண்ட் டிராப்ட் தொகை | ஏலம்/ ஒப்பந்தப் புள்ளி கேள்வி உறுதி செய்த பின் செலுத்த வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3. | 4. | 5. | 6. |
| 1. | வைஸ் சேர்மன் டி.வீரபத்திர சாலையில் அமைந்துள்ள சுதந்திர தின வெள்ளி விழா மாநகராட்சி பழைய பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | - | 5.00 இலட்சம் | 15.00 இலட்சம் | 6 மாத உரிமத் தொகை |
| 2. | பேருந்து நிலைய வணிக வளாக செல்லார் பகுதி இரு சக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | - | 1.00 இலட்சம் | 2.00 இலட்சம் | உரிமத் தொகை முழுவதும் |
| 3. | மாநகராட்சி பேருந்து நிலையத்தின் வடபுறம் வி.சி.டி.வி. சாலையின் தென்புறம் சுற்றுச் சுவரின் உள்ளே மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள சுமார் 188x34 ச.அடி நீள அகலம் உள்ள சிமெண்ட் கூரை ஷெட் உள்ள இடத்தில் சைக்கிள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | - | 1.00 இலட்சம் | 2.00 இலட்சம் | உரிமத் தொகை முழுவதும் |
| 4. | பேருந்து நிலையத்தில் மினி பேருந்து நிறுத்துமிடத்தின் கீழ்புறமுள்ள இரு சக்கர வாகன நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | - | 2.00 இலட்சம் | 3.00 இலட்சம் | உரிமத் தொகை முழுவதும் |
| 5. | நேதாஜி சாலை வணிக வளாகத்தின் தரைத்தளப் பகுதியில் (செல்லார்) இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | - | 1.00 இலட்சம் | 2.00 இலட்சம் | உரிமத் தொகை முழுவதும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | ஆர்.கே.வி. சாலை தினசரி அங்காடி பகுதியில் வடக்கு தெற்கு பகுதியில் இரு சக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | - | 1.00 இலட்சம் | 1.00 இலட்சம் | உரிமத் தொகை முழுவதும் |
| 7. | பிரப்ரோடு கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (ஆண்கள் மற்றும் பெண்கள்) | - | 1.00 இலட்சம் | 2.00 இலட்சம் | உரிமத் தொகை முழுவதும் |
| 8. | பேருந்து நிலையத்தில் இரண்டாம் பிளாட்பாரத்தில் 4'x4' அளவில் பூ வியாபாரம் செய்யும் உரிமம் (பூக்கடை எண். 2) | - | 1.00 இலட்சம் | 1 .00 இலட்சம் | உரிமத் தொகை முழுவதும் |
| 9. | மாநகராட்சி ஆடு வதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (Slaughter House) | - | 50,000- | 1.00 இலட்சம் | உரிமத் தொகை முழுவதும் |

## ஏலம் நடத்தப்படும் அனைத்து இனங்களுக்குமான பொது நிபந்தனைகள்

1. எல்லா ஏலங்களுக்கும் ஈரோடு மாநகராட்சி சட்டத்தில் அடங்கிய விதிகளும், அரசால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் விதிகளும், இனிமேல் ஏற்படக்கூடிய விதிகளும், கீழ் குறிப்பிட்ட பொதுவானதும் மற்றும் சிறப்பு நிபந்தனைகளும் பொருந்தும்.

2. அட்டவணையில் கண்டுள்ளபடி எல்லா குத்தகை உரிம இனங்களும் 2017ஆம் ஆண்டு ஏப்ரல் 1ம் தேதி முதல் 2020ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் தேதி முடிய உள்ள 3 ஆண்டிற்கு ஏலம் விடப்படும்.

3. ஆரம்பத்தில் ஏலத்தின் மூலம் பெறப்படும் குத்தகை தொகையில் இரண்டாமாண்டில் 5 சதவீதம் குத்தகை தொகை உயர்வும், மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டின் தொகையில் 5 சதவீதம் தொகை உயர்வும் செய்யப்படும்.

**(உதாரணம்)**

ஆரம்ப ஆண்டு குத்தகை தொகை 100 என்றால் (ரூபாய் நூறு மட்டும்)

இரண்டாம் வருடத்திற்கான குத்தகை தொகை ரூ.105 (ரூபாய் நூற்றி ஐந்து மட்டும்)

மூன்றாம் வருடத்திற்கான குத்தகை தொகை ரூ.110.25 (ரூபாய் நூற்றி பத்து மற்றும் இருபத்தி ஐந்து பைசா மட்டும்)

4. மூன்றாண்டுகள் முடிந்த பின்னர் பொது ஏலத்தில் விடப்படும். இதனை நீட்டித்து தரவோ (அ) பொது ஏலத்தை தவிர்த்து குத்தகை உரிமம் குத்தகைதாரர் கோரக் கூடாது.

5. மூன்றாண்டு கால அளவு என்ற ஒரு தொகுப்பு கால அளவிற்குள் கட்டணம் வசூலிக்கும் குத்தகைதாரர் காலமானால் அவர்களின் வாரிசுதாரர்கள் குத்தகைதாரராக அவ்வுரிமத்தை பெறலாம். வாரிசுதாரருக்கு விருப்பம் இல்லையெனில் உரிமை மறுஏலம் விடப்படும்.

6. ஆண்டு குத்தகை இனங்கள் தற்போது மூன்று ஆண்டுகளுக்கு ஏலம் விடுவதால் வைப்புத் தொகை மற்றும் வங்கி உத்திரவாதச் சான்றுத் தொகை அந்தந்த ஆண்டுகளுக்கு மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

7. உரிமம் அல்லது கட்டணம் 01.04.2017 முதல் 31.03.2020 முடிய 3 ஆண்டிற்கு விடப்படும் அல்லது உரிமம் இனத்தை ஒப்படைக்கும் தேதி முதல் 31-03-2020 முடிய விடப்படும்.

8. ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக குறிக்கப்பட்டிருக்கும் வைப்புத் தொகை மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி உத்திரவாத சான்றிதழை குத்தகை காலமான 2017 முதல் 2020 முடிய ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31ம் தேதி முடிய செல்லத்தக்கவாறு ஆணையர் ஈரோடு மாநகராட்சி அல்லது Commissioner, Erode City Municipal Corporation என்ற பெயரில் முன்னதாகவே செலுத்தியிருந்தாலொழிய ஏலம் கோர/ஒப்பந்தப்புள்ளி கொடுக்க யாருக்கும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. மாநகராட்சியில் வேலை செய்வதற்காகவோ சாமான்கள் வழங்குவதற்காகவோ மற்றும் இதர காரியங்களுக்காகவோ செலுத்திய வைப்புத் தொகையை இந்த ஏலத்திற்கான/ ஒப்பந்தப்புள்ளிக்கான வைப்புத் தொகைகளாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

9. ஏலம் கோர விருப்பமுள்ளவர்கள் தாங்களே நேரில் வந்து டெண்டரில் கலந்து கொள்ள வேண்டும் அல்லது ஏலம் கோர வேண்டும். நேரடியாக டெண்டர் மற்றும் ஏலத்திற்கு வந்து கலந்து கொள்ள இயலாதவர்கள் அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி மூலம் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம். அவ்வாறு நியமிக்கப்படும் பிரதிநிதிக்கு அதிகார பத்திரம் சரியான முத்திரைத்தாளில் (NON JUDICIAL) எழுதப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு அதிகாரம் அளிக்கும் பத்திரத்தில் அதிகாரம் அளிப்பவர் மற்றும் பிரதிநிதியின் மாதிரி கையொப்பம் சான்றுருதி அலுவலரால் மேலொப்பம் செய்யப்பட வேண்டும். மேலும் ஏலம் நடத்தப்படுவதற்கு முன்னரே ஆணையாளரிடமோ அல்லது ஏலம் நடத்தும் அதிகாரியிடமோ அதிகாரப் பத்திரத்தை ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு வழங்கிய அதிகாரப் பத்திரத்தை ஒப்புக் கொள்ள அல்லது நிராகரிக்க ஏலம் நடத்துபவருக்கு உரிமை உண்டு. மேலும் பிரதிநிதி மூலம் கேட்கப்படும் எந்த கேள்வித் தொகையையும் அதிகாரம் வழங்கியவர் ஏற்றுக் கொண்டதாக கருதப்படும். அதிகாரம் வழங்கியவர் இப்பத்தியில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை மீறினால் பொது மற்றும் சிறப்பு ஏல நிபந்தனைகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும். பிரதிநிதி அல்லது ஏலம் கோர விரும்புபவர் இவர்களில் ஒருவர் மட்டுமே ஏலம் கோர அனுமதிக்கப்படுவர்.

10.அ) இம்மாநகராட்சியில், முன் ஆண்டுகளிலோ அல்லது நடப்பு ஆண்டிலோ உரிமதாரராக இருந்து அவரோ அல்லது அவரது வாரிசுதாரர்களோ, எந்த ஒரு இனத்திற்கும் உரிமத்தொகையை செலுத்தாமல் நிலுவை ஏற்படுத்திய நபர்களையும் அதன் காரணமாக உரிமம் ரத்து செய்யப்பட்டவர்களும் மற்றும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர காரணமானவர்களும் கண்டிப்பாக ஏலத்தில்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் இதர நிறுவனங்களில், மேலே தெரிவித்த குறைபாடுகளுக்கு உட்பட்டவர்களும் ஏலம் கோர அனுமதிக்கப்படமாட்டார்கள். அவ்வாறு இருப்பின் டெண்டரும் நிராகரிக்கப்படும்.

ஆ) பொது ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளிகளில் கலந்து கொள்ளும் அனைவரும் வருவாய் வட்டாட்சியரால் வழங்கப்பட்ட இருப்பிட சான்றுடன், **வருமான வரி கணக்கு அட்டை நகல்**, மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரி மற்றும் வரியில்லா இனங்களில் நிலுவையில்லை என்ற சான்றும் பெற்றிருக்க வேண்டும். உரிமம் ஒப்படைக்கும் போது அலுவலகத்தில் சமர்ப்பித்த நிரந்தர முகவரியில் இருக்க வேண்டும். முகவரி மாறினால் அதன் விபரத்தை மாநகராட்சி ஆணையருக்கு பதிவு அஞ்சல் மூலம் தெரிவிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் செலுத்திய அனைத்து வைப்புத்தொகைகள் மற்றும் வங்கி உத்திரவாத சான்று பறிமுதல் செய்யப்படும்.

11. போதிய செல்வநிலை இல்லாதவர் என்று ஆணையர் அல்லது ஏலம் நடத்தும் அதிகாரி கருதினால் ஏலக்கேள்வியை நிராகரிக்க அவருக்கு அதிகாரமுண்டு மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பு உண்டாகுமென்று கருதக்கூடியதாக இருக்கும் ஏலக்கேள்வியையும்/ ஒப்பந்தப்புள்ளி கேள்வியையும் நிராகரிக்க உரிமை உண்டு.

12.அ) ஆணையர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அதிகாரியின் வசதிக்கு ஏற்றபடி ஏல இனங்கள் முன்பின் நடத்தப்படும்.

ஆ) ஆணையாளரால் குறிப்பிடப்படும் வேறு ஒரு தேதிக்கு எந்த ஏல இனத்தையும் தள்ளி வைக்க அவருக்கு அதிகாரமுண்டு. மேலும் எந்தவித காரணமும் காட்டாமல் ஒருவருடைய ஏலத்தை தள்ளுபடி செய்ய மாமன்றத்திற்கு அதிகாரமுண்டு. முதல் நாள் ஏலத்தில் உயர்ந்த தொகைக்கு கோரியவர்களுடைய கேள்வியை ஒத்தி வைத்த தேதியில் நடைபெறும் ஏலத்தின்போது அரசு மதிப்பாக எடுத்துக் கொள்ளப்படும்.

இ) ஏலம் நடக்கும் சமயத்திலோ அல்லது உரிமம் காலம் அமுலிலிருக்கும் காலத்திலோ இந்த ஏல விளம்பரத்தில் கண்ட எந்த நிபந்தனையையும் மாற்றவோ அல்லது நீக்கவோ மாமன்றத்திற்கு அல்லது ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

ஈ) முதல் ஏலத்தில் அல்லது ஒப்பந்தப்புள்ளியில் ஒருவர் கோரியுள்ள உயர்ந்த கேள்வியை உறுதி செய்து ஆணை வெளியிடாமல் இருக்கும் பட்சத்தில், மறு ஒப்பந்தப்புள்ளி அல்லது ஏலம் கோரப்பட்டு அதில் அவர் கலந்து கொள்ளாவிட்டாலும் கூட, அவர் முதல் ஏலத்தில் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள ஏலம் அல்லது ஒப்பந்தப்புள்ளி தொகை உயர்ந்த பட்சமாக இருப்பின் அது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு முடிவு செய்யப்படும்.

உ) ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் விடப்படும் குத்தகை இனங்களுக்கு (கடைகள் மற்றும் இதர பொது குத்தகை) கேட்கப்பட்டுள்ள உச்ச கேள்வி குறைவாக கேட்கப்பட்டுள்ளது என ஆணையர் (அ) மாமன்றம் கருதுமானால் மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு ஏலம் விடப்படும். முந்தைய ஏலத்தில் உச்சக் கேள்விதாரர், அடுத்து கொண்டுவரப்படும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டவராவார். அதனால் அவரது உச்சக் கேள்வி நிராகரிக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. மறு ஏலத்தில் முந்தைய ஏலத்தில் கேட்கப்பட்டுள்ள உச்சக் கேள்வியை ஆரம்பக் கேள்வியாக வைத்து ஏலம் விடப்படும்.

ஊ) ஏல இனங்களை பொது ஏலம் விடும்போது கடும் போட்டியின் காரணமாக, ஏலக் கேள்விகள் மாநகராட்சி எதிர்பார்க்கும் தொகைக்கு மேல் இருக்கும்போது, ஏற்கனவே பெறப்பட்ட பொறுப்புத்தொகை போதுமானதாக இல்லை என ஏலம் விடும் அதிகாரி கருதும் பட்சத்தில், கூடுதலான பொறுப்புத் தொகை செலுத்த உத்திரவிட அதிகாரமுண்டு. இதனை ஆட்சேபிக்க ஏலம் கேட்பவர்களுக்கு அதிகாரமில்லை.

எ) ஏலஇனத்தின் உரிம காலம் மூன்றாண்டுகளாகும். மூன்றாண்டு முடிவதற்கு இடைப்பட்ட காலத்தில் உரிம இனத்தை ஒப்படைத்தாலோ/உரிமத் தொகை செலுத்தாமல் இருந்தாலோ அந்த இனத்தை மாநகராட்சி உரிமதாரர் பொறுப்பிலேயே ஏலம் விடப்படும். அவ்வாறு ஏலம் விடப்படும்பட்சத்தில் மாநகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டால் அத்தொகை முழுவதும் முதல் குத்தகைதாரரிடமிருந்து வசூலிக்க சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். லாபம் ஏற்பட்டால் அதனை உரிமை கொண்டாட உரிமதாரருக்கு உரிமை இல்லை.

ஏ) ஒவ்வொரு உரிமதாரரும் உரிம இனத்தை தொடர்ந்து நடத்த ஒவ்வொரு ஆண்டும் அந்தந்த ஆண்டு முடிய 3 மாதங்களுக்கு (90 நாட்களுக்குள்) முன்னரே எழுத்து மூலமாக ஆணையாளருக்கு உரிமத்தை புதுப்பிக்க விருப்பம் தெரிவித்து அதற்கான உரிமத்தொகையை பொது நிபந்தனை வரிசை எண்.15 (அ)—ல் குறிப்பிட்டுள்ளதுபோல் செலுத்த வேண்டும்.

13. ஒவ்வொரு குத்தகை உரிமமும், பொதுவாக அரசு மதிப்புக்கு மேல் உயர்ந்த தொகைக்கு கோரியவர்களுக்கு விடப்படும். அப்படி உயர்ந்த தொகைக்கு கோரிய நபர் தகுதியில்லாதவர் என மாமன்றம் அபிப்பிராயப்பட்டால், அதற்கு குறைந்த தொகைக்கு கோரியிருக்கும் அடுத்த நபர் தகுதியுள்ளவர் என்று அபிப்பிராயப்பட்டால், அவர் (அடுத்த நபர்) கோரிய தொகைக்கு ஏலத்தில் எடுத்ததாக கருதப்பட்டவராவார். அதனால் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியவர்களுக்கு யாதொரு காரணமும் தெரிவிக்காமல் எந்த ஏலத்தையும் ஒப்புக்கொள்ளவாவது, நிராகரிக்கவாவது அல்லது வேறு ஏலம் நடத்தவோ (அல்லது) உரிமக் காலத்தை குறைக்கவாவது மாமன்றத்திற்கு அதிகாரமுண்டு. இதனை ஆட்சேபித்து வழக்கு தொடர யாருக்கும் உரிமை இல்லை. மாமன்றத்தின் முடிவே இறுதியானது.

14. ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளைப் படித்து அல்லது கேட்டு அவைகளுக்கு கட்டுப்பட்டு ஏலத்தில் கலந்து கொள்கிறோம் எனவும், ஏலம் எடுத்ததை ஒப்புக் கொண்டதற்கு அத்தாட்சியாக ஏலப்பதிவேட்டிலும் பொது ஏலஅறிக்கையில் கண்டுள்ள உரிமதாரர் உறுதிமொழியிலும் கையொப்பம் செய்ய வேண்டும். ஏலத்தில் கலந்து கொள்ள வைப்புத்தொகை செலுத்தியவர்கள் கண்டிப்பாக ஏலக்கேள்வி கேட்க வேண்டும். தவறினால் வருவாய் ஆதாயம் பெறலாம் என்ற நோக்கத்துடன் ஏலத்தில் கலந்து கொள்ள முன்பணம் செலுத்தியதாக கருதி செலுத்தியுள்ள அனைத்து தொகைகளும் பறிமுதல் செய்யப்படும்.

15. ஏலம் உறுதி செய்யப்பட்டு உத்திரவு கிடைத்த ஏழு நாட்களுக்குள், ஏலம் எடுத்துள்ள உரிமதாரர்கள்

(அ) உச்ச ஏல உரிமத் தொகையானது ரூ.10 லட்சம் அல்லது அதற்குக் குறைவாகவும் இருந்தால், ஏலம் உறுதியானவுடனேயே ஏலத்தொகை முழுவதையும் செலுத்திவிட வேண்டும். உரிமத்தொகையுடன் (துப்புரவு பணியாளர் காவலர்கள் சம்பளம் மற்றும் இதரப்படிகள் சேர்த்து) ரூ.10லட்சத்திற்கு மேற்பட்டால், மொத்த உரிம தொகையில், 50 சதவீதம் வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும். மீதம் உள்ள 50 சதவீதம் உரிமத் தொகையை ஆறு தவணைகளில் ஒவ்வொரு மாதமும் 10-ம் தேதிக்குள் ஒழுங்காக செலுத்தி வந்தால் மட்டுமே, மேற்படி தொகையை அந்தந்த ஆண்டு கடைசி 6 மாத உரிமத் தொகைக்கு அக்டோபர் முதல் மார்ச் முடிய ஈடு செய்து கொள்ளப்படும். முதல் தவணை தொகையை ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் - 10-ம் தேதிக்குள் செலுத்த வேண்டும். மேற்கண்ட நாள் விடுமுறையாக இருந்தால் அடுத்து வேலைநாளில் செலுத்த வேண்டும்.

ஆ) வங்கி உத்திரவாத சான்று கொடுத்து பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் ஏலத்தினை உறுதி செய்து, உத்திரவு வழங்கியதும், உரிமத் தொகை முழுவதும் செலுத்திய பின்பு வங்கி உத்திரவாத சான்று திரும்ப வழங்கப்படும்.

இ) மேலே சொல்லியுள்ள வைப்புத் தொகை மற்றும் பொறுப்புத் தொகைக்கு மாநகராட்சியால் எவ்வித வட்டியும் கொடுக்கப்படமாட்டாது.

ஈ) ஏலம் உறுதி செய்யப்பட்டு உத்திரவு பெற்ற 7 தினங்களுக்குள் ரூ.100.00 மதிப்புள்ள முத்திரை தாளில் (NON JUDICIAL) உரிமதாரர் மாநகராட்சியின் சட்ட திட்டங்களுக்கு கட்டுபட்டு நடக்கிறேன் எனவும் மாநகராட்சிக்கு எதிராக எந்த ஒரு நீதிமன்றத்திலும் வழக்கு தொடரமாட்டென் எனவும் ஒப்பந்தம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

உ) மேலே கண்ட பத்திகளில் சொல்லப்பட்டிருக்கும் தொகையைக் கட்டத் தவறினாலோ மற்றும் 15-(ஈ)-ன்படி பத்திரம் எழுதிக் கொடுக்கத் தவறினாலோ, குத்தகைதாரர் தான் கட்டியிருக்கும் வைப்புத் தொகையை இழந்து விடுவதுமல்லாமல் அவருடைய பொறுப்பின் பேரிலேயே உரிமத்தை மறுஏலம், ஒப்பந்தப்புள்ளி விடுவதால் ஏற்படும் இழப்பு முழுவதையும் அவரிடம் இருந்து வசூல் செய்ய மாமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. ஆனால் மறு ஏலத்தில் கிடைக்கும் லாபத்திற்கு முந்தைய உரிமதாரருக்கு யாதொரு உரிமையும் கிடையாது.

16. மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு ஏலம் கோர விரும்பும் நபர்கள், ஏலம் (அ) ஒப்பந்தப்புள்ளி முடிந்த இனங்களுக்கு ஏலத்தொகையை விட அதிக தொகைக்கு ஏலம் எடுத்துக் கொள்ள விரும்பினால் ஏலம் முடிந்த 24 மணி நேரத்திற்குள் (வேலைநாட்கள்) ஏலம் கேட்கப்பட்ட தொகையை காட்டிலும் ஏலத்தொகையில் 10 சதவீதத்திற்கு குறையாத தொகையினை அதிகம் வைத்துக் கொள்வதாக ஒப்புக்கொண்டு, உச்ச கேள்வி தொகை முழுவதையும் செலுத்தி ஏலம் நடத்தும் அலுவலர்க்கு மனு செய்து கொள்ள வேண்டும். மறு ஏலத்தில் மனுதாரரின் உச்ச கேள்வியிலிருந்துதான் ஏலம் ஆரம்பிக்கப்படும். மறு ஏலத்தின்போது கூடுதல் கேள்வியில்லா பட்சத்தில் மனுவில் கோரிய உச்ச கேள்வி தொகைக்கு உறுதி செய்யப்படும்.

17. தவணை முறையில் செலுத்தப்படும் இனங்களில் தொகை குறிப்பிட்ட காலத்திலாவது அதற்கு முன்னராவது செலுத்தப்படாவிட்டால், 15வது விதியில் குறிப்பிட்டிருக்கும் தவணைத் தொகை செலுத்த வேண்டிய தேதியில் இருந்து 18% வீதம் அபராதம் சேர்த்து செலுத்தவேண்டும். மாதம் என்பது ஆங்கில மாதங்களை குறிக்கும்.

18. 15-வது பத்தியில் குறிப்பிட்டபடி தொகை செலுத்தத் தவறினால், அல்லது 17-ம் பத்தியில் கண்டுள்ளபடி 18% அபராதத்துடன் 15 நாட்களுக்குள்ளாக செலுத்தாவிடில், உரிமத்தை உரிமதாரரின் சொந்த பொறுப்பில் மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் விட்டு இதனால் ஏற்படும் சகல இழப்பையும் வசூலிப்பதுடன், அவர் கட்டியிருக்கும் வைப்புத் தொகைகள் (Security Deposit ) பறிமுதல் செய்யப்படும்.
அ) உரிமதாரருக்குக் கொடுக்கப்படும் அறிக்கை அல்லது உத்திரவுகள் அவரின் கடைசி குடியிருப்பிற்கு (அல்லது) தொழில் செய்யுமிடத்திற்கு அனுப்பப்பட்டால் அல்லது மேற்படி இடத்தில் ஒட்டப்பட்டால் அவரிடம் சரியான முறையில் சார்வு செய்ததாக கருதப்படும்.

19. உரிமதாரர்கள் மாமன்றத்தால் நிர்ணயித்திருக்கும் கட்டணங்களுக்கு அதிகமாக உரிமக் கட்டணம் வசூல் செய்யக்கூடாது. அப்படி அதிகப்படியாக வசூல் செய்வதாக ஆணையர் நம்பும்படியாக உறுதி செய்யப்பட்டால், உரிமத்தை ரத்து செய்வதுடன், உரிமதாரர் கட்டி இருக்கும் பொறுப்புத் தொகைகள் பறிமுதல் செய்யப்படும். நீதிமன்ற நடவடிக்கைக்கும் உள்ளாவார்கள். மேலும் 24-வது பத்தியில் உள்ளபடி ஆணையாளரால் அபராதமும் விதிக்கப்படும். இதில் எது நிர்வாகத்திற்கு உகந்ததோ அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

20. உரிமதாரர் எக்காரணத்தைக் கொண்டும் இழப்பு நேரிட்டாலும் அல்லது இதர காரணங்களை கொண்டாவது உரிமத்தைக் குறைத்துத் தர வேண்டுமென்றாவது அல்லது கட்டண விகிதங்களை அதிகப்படுத்த வேண்டுமென்றாவது, கோருவதற்கு உரிமை இல்லை. இடையில் ஏற்படும் எவ்வித இழப்புகளுக்கும் மாமன்றத்தால் இழப்பீடு தரப்படமாட்டாது.

21. மாமன்றத்தின் அனுமதியைப் பெற்றுக் கொண்ட பின்னரே, உரிமதாரரிடம் உரிம இனம் ஒப்படைக்கப்படும். அவ்வாறு ஒப்படைக்கப்படும் மாநகராட்சி சொத்துக்களில் ஆணையர் அல்லது மாமன்றம் அனுமதியின்றி யாதொரு மாறுதல் அல்லது சேதமும் செய்வது கூடாது. மாறுதல் அல்லது சேதம் ஏற்படுத்தினால் உரிமம் ரத்து செய்யப்படுவதுடன், இதனால் மாநகராட்சிக்கு ஏற்படும் இழப்பினை அவரிடம் வசூல் செய்யப்படும்.

22. உரிமம் விடப்பட்டிருக்கும் இடத்தில், உரிம காலத்தில் ஏதாவது பழுதோ(அ) விரும்பத்தகாத நிகழ்வுகளோ ஏற்பட்டால் அவ்விதம் ஏற்படும் இழப்பிற்கு மாமன்றம் கோரும் தொகையை கொடுப்பதற்கு உரிமதாரர் கட்டுப்பட்டவராவார். இவ்விஷயங்களில் மாமன்றத்தின் தீர்மானமே முடிவானது. உரிமத்தை நடத்தி வரும் காலங்களில் ஏற்படும் அசம்பாவிதங்களுக்கு மாநகராட்சி எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

23 ஒப்பந்த விதிமுறைகள் சம்பந்தமாகவும், உடன்படிக்கையில் காணும் யாதொரு பதம் அல்லது வாசகங்களில் அர்த்தம் சம்பந்தமாகவும் ஆணையரின் தீர்ப்பே முடிவானதாகும். .

24. உரிமம்தாரர்கள் நிபந்தனைகளின்படியாவது அல்லது ஒவ்வொரு உரிமம் சம்பந்தமான சிறப்பு நிபந்தனைகளின்படியாவது நடக்கத் தவறினால் அப்படி தவறிய ஒவ்வொரு தவறுக்கும் ரூ.5000-க்கு அதிகப்படாமல் ஆணையர் அவர்களால் அபராதம் விதிக்கப்படும், அப்படி விதிக்கப்படும் அபராதம் ரூ.5000-க்கு அதிகப்படுமானால் மாமன்றத்திற்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம். தவிர, உரிமதாரர் வசம் ஒப்புவிக்கப்பட்ட சொத்துக்களுக்கு ஏதேனும் சேதம் (அ) இழப்பு ஏற்படுத்தினாலும் அல்லது உரிமதாரர்கள் நிபந்தனைகளுக்கு மீறி நடந்தால் உண்டாகும் இழப்பீடுகளை கொடுக்க கடமைப்பட்டவராவார். இழப்பீடு தொகை எவ்வளவு என்பதை மாமன்றம் தீர்மானிக்கும். இது சம்பந்தமாக மாமன்றத்தின் தீர்மானமே முடிவானதாகும். மேலும் ஒப்பந்தத்தை அல்லது உரிமத்தை ரத்து செய்து மாமன்றமே ஏற்று நடத்தவும் அல்லது மறுபடியும் ஏலம் விடவும் மாமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. அதுபடி மாமன்றம் ஏற்று நடத்தி வருவதினாலாவது மறு ஏலம் விடுவதினாலாவது ஏற்படும் நஷ்டத்திற்கு உரிமதாரர் பொறுப்பு ஏற்பது அல்லாமல், அவரால் கட்டப்பட்டிருக்கும் வைப்புத்தொகைகளையும் இழந்துவிட வேண்டும். மாமன்றம் ஏற்று நடத்துவதில் கிடைக்கும் லாபம் சம்பந்தமாக உரிமதாரருக்கு யாதொரு உரிமையும் இல்லை.

25. ஆணையாளரால் விதிக்கப்படும் அபராத தொகையை மற்றும் இழப்பீடு தொகையை, ஒருவார காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் உரிமதாரர் செலுத்தியிருக்கும் வைப்புத் தொகையில் இருந்து வரவு வைத்து கொள்ளப்படும்.

26. உரிம நிபந்தனைகளின்படி நடந்து கொண்டால் அவர்களால் செலுத்தப்பட்டிருக்கும் வைப்புத் தொகையை உரிமகாலத்தின் ஒவ்வொரு ஆண்டு தணிக்கை முடிவுற்று அறிக்கை இவ்வலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்று தணிக்கை மறுப்புகள் பரிசீலனை செய்த பின்னர், மனு செய்து கொள்வதின்பேரில் திருப்பி தரப்படும்.

27. மாநகராட்சி உரிம இனங்கள் அல்லது கடைகள் ஒப்படைக்கப்பட்டு நடத்தப்படாமல், உரிமத்தொகை செலுத்தப்படாமல் இருந்தால், உரிமதாரருக்கு அறிவிப்பு கொடுக்காமலேயே ஆணையர் பூட்டை உடைத்தாவது அல்லது வேறுவிதமாவது மேற்படி இடங்களில் நுழைந்து அதிலுள்ள சொத்தைக் கைப்பற்றிக் கொண்டு மாமன்றத்தால் வசூல் செய்ய ஏற்பாடு செய்ய அதிகாரம் உண்டு. அவ்வாறு கைப்பற்றுவதனால் ஏற்படும் செலவுகள் அல்லது இழப்பை ஏல விதிகளின்படி நடத்தத்தவறிய உரிமதாரிடமிருந்து கைப்பற்றிய சொத்துக்களின் மூலம் கிடைத்த தொகை போக மீதி வசூல் செய்யப்படும். இது சம்பந்தமாக வழக்கு தொடர உரிமதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை.

28. (அ) உரிமகாலத்தில் உரிமதாரருக்கு ஏற்படும் இழப்புகளுக்கு மாமன்றத்தால் யாதொரு இழப்பீடும் தரப்படமாட்டாது.

ஆ) உரிமதாரர்களால், மாநகராட்சியில் செலுத்தப்பட்டுள்ள எந்த தொகைக்கும் வட்டி கொடுக்கப்படமாட்டாது. இயற்கைச் சீற்றத்தால் ஏற்படும் இடையூறுகள், மற்றும் தொத்து வியாதிகள், மாநகராட்சி எல்லைக்குள் பரவி அதன் காரணமாக உரிம இடங்களை தற்காலிகமாக மூடும்படி உத்திரவிட நேர்ந்தால் அதன்படி மூடிவிட வேண்டும்.

29. மாநகராட்சிக் கடை மற்றும் உரிம இனங்களுக்கும் 15-வது பத்தியில் சொல்லப்பட்டபடி, ஒவ்வொரு மாதமும் உரிமத்தொகையை தவறாமல் செலுத்த வேண்டும். உரிமதாரருக்கு அறிவிப்புக் கொடுத்தும் வட்டியுடன் அந்தந்த மாதம் இறுதிக்குள் அந்தந்தமாத உரிமத்தொகை செலுத்தப்படாவிட்டால் அறிவிப்புக் கொடுக்காமலேயே மாநகராட்சி ஆணையர் மேற்படி உரிம இனத்தினையோ அல்லது கடையையோ கைப்பற்றி மாநகராட்சியால் பொறுப்பு எடுத்து மாமன்றத்தின் அனுமதி பெற்று உரிமத்தை ரத்து செய்ய ஆணையருக்கு அதிகாரம் உண்டு அது சம்பந்தமாக உரிமதாரர் ஆட்சேபணை செய்யக்கூடாது. அதனால் மாநகராட்சிக்கு ஏற்படும் செலவுகள் உரிமதாரர்களிடம் வசூலிக்கப்படும். உரிமதாரர் இப்பொருள்பற்றி ஆட்சேபனை ஏதும் இருப்பின் மாமன்றத்திற்கு மனு செய்து கொள்ளலாம் மாமன்றத்தின் முடிவே இறுதியானது. மாநகராட்சி கட்டிடங்களுக்கு யாதொரு சேதாரம் ஏற்படாமல் சொந்த ஆட்களைக் கொண்டு இரவு பகல் காலங்களில் பாதுகாத்து வருவது உரிமதாரரின் பொறுப்பாகும். மேற்படி கட்டிடங்களுக்கு பாதிப்போ (அல்லது) இழப்போ ஏற்பட்டால் அதனால் ஏற்படும் சகல இழப்புகளுக்கும் உரிமதாரரே முழுப்பொறுப்பாவார். மாமன்றம் நிர்ணயிக்கும் இழப்புத் தொகையினை உரிமதாரர் செலுத்த வேண்டும். அப்படி செலுத்தத் தவறினால் அறிவிப்புக் கிடைத்த 10 நாட்களில் உரிமதாரரது ஒப்பந்தம் ரத்து செய்யப்படும். மேலும் அவரால் கட்டப்பட்ட முன்பணத் தொகை யாவும் பறிமுதல் செய்து மறு ஏலத்திற்கு கொண்டு வரப்படும். அதில் ஏற்படும் இழப்புகளுக்கு உரிமதாரரே முழுப்பொறுப்பேற்க வேண்டும்.

30. உரிமத் தொகைகளை நிபந்தனைகளின்படி செலுத்தத் தவறினாலோ அல்லது கடைகளுக்கோ மற்றுமுள்ள உரிம இனங்களுக்கோ கெடுதி ஏற்படும் வண்ணம் நடந்து கொண்டாலோ உரிமதாரரை உடனடியாக இடத்தைவிட்டு அப்புறப்படுத்த ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. அவ்வாறு அப்புறப்படுத்தியபின் மேற்படி கடைகள் மற்றும் உரிமம் இனங்களை மறுஏலம் விடுவதில் மாமன்றத்திற்கு இழப்பு ஏற்பட்டாலும், பாக்கியுள்ள உரிம காலத்திற்கு உண்டான இழப்புத் தொகையும் மறு ஏலத்தால் ஏற்படும் செலவையும் ஏலதாரரே செலுத்த கடமைப்பட்டவராவர். மறு ஏலத்தில் ஒருவரும் ஏலம் எடுக்காவிட்டால் பாக்கியுள்ள உரிம காலத்திற்குண்டான வாடகைத் தொகையை முதலில் ஏலம் எடுத்தவரே செலுத்த வேண்டும்.

31. உரிமதாரர் ஏல நிபந்தனைகளின்படி கடையையோ அல்லது உரிம இனங்களையோ, மாநகராட்சி வசம் ஒப்புவிக்கத் தவறினால், காவல்துறை உதவியுடன் மேற்படி கடையையோ உரிம இனங்களையோ மாநகராட்சியால் சுவாதீனப்படுத்தி பொறுப்பெடுத்துக் கொள்ளப்படும். இது விஷயமாய் உரிமதாரர் எந்த விதமான பரிகாரம் தேடுவதற்கு உரிமம் இல்லை.

32. ஏலத்தில் கலந்து கொள்ளாமல் விண்ணப்பம் மூலம் ஒரு குறிப்பிட்ட ஏலக்கேள்வி கோருபவர்களின் மனு தள்ளுபடி செய்யப்படும்.

33. ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 432-ன்படி ஏலக்கட்டுப்பாடுகளை எந்த நேரத்திலும் தளர்த்துவதற்கும் அல்லது புதிய விதிகளை சேர்ப்பதற்கும் மாமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. அதனை ஆட்சேபிக்க ஏலத்தில் கலந்து கொண்டவர்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ உரிமம் இல்லை.

34. உரிமதாரர் உரிமம் பெறப்பட்டுள்ள இடங்களில் மட்டும்தான் கட்டணத்தை வசூலித்துக் கொள்ளவேண்டும். அனுமதிக்கப்பட்ட இடங்கள் தவிர இதர இடங்களில் கட்டணம் வசூலிக்கப்படுவதாக புகார்கள் வரப்பெற்று அவை உறுதி செய்யப்பட்டால் பத்தி எண்.24-ல் விவரித்துள்ளபடி நடவடிக்கை எடுக்கப்படும்.

35. மாநகராட்சி உரிமம் விடப்பட்ட இனத்தின் உரிமம் காலம் முடியும் பட்சத்தில், உரிமதாரர் தானகவே உரிமத்தை இழந்து விடுகிறார். உரிமம் காலதை நீடிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தவோ அல்லது உரிமம் நீடிக்கக்கோரி வழக்கு தொடரவோ, உரிமதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை.

36. எல்லா உரிமத்திற்காக ஏல இனத்திற்கும் ஒப்பந்தங்களுக்கும் செலுத்தப்பட்ட வைப்புத்தொகைகள் அனைத்தும், அனைத்து உரிம இனங்களையும் மாமன்றம் உறுதி செய்து உத்திரவு பிறப்பித்த பின்னர்தான் உரிமம் உறுதியானவர் தவிர்த்து மற்ற அனைவருக்கும் விண்ணபத்தின்பேரில் திரும்ப அளிக்கப்படும்.

37. உரிமதாரர் கட்டணத் தொகையை வசூல் செய்வதற்கு தங்கள் சொந்த செலவில் ஆணையர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டபடி, முத்திரைப் பற்றுச்சீட்டு கொடுக்க வேண்டும். சரியானபடி பற்றுச்சீட்டு கொடுக்காமல் தொகை வசூல் செய்யக்கூடாது. மேற்படி பற்றுச்சீட்டு பயன்படுத்துவதற்கு முன்னர் அவைகள் மாமன்றத்தின் முத்திரையிடப்பட வேண்டும். மேற்படி பற்றுச்சீட்டு புற இதழ் மற்றும் அக இதழ் கொண்டவைகளாகவும், புத்தக எண், தொடர் எண் முதலியவைகள் கொண்டதாகவும் இருக்க வேண்டும். உரிமதாரரால் கொடுக்கப்படும் அல்லது கொடுக்கப்பட்ட எந்த பற்றுச்சீட்டையும் தணிக்கை செய்ய ஆணையருக்கோ அல்லது அவரால் அதிகாரம் பெற்றவருக்கோ உரிமை உண்டு. உரிமதாரர் அவைகளை எப்போதும் சரியான நிலையில் வைத்திருக்க வேண்டுவதுடன், மாநகராட்சி கோரும் போது அவைகளை உரிமதாரர் மாநகராட்சிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

38. மேலேகண்ட எந்த நிபந்தனையின் பிரகாரமாவது அல்லது ஆணையரால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் நிபந்தனைகளின்படியாவது நடக்கத் தவறினால் மாமன்றத்திற்கு உரிமத்தை ரத்து செய்ய முழு உரிமையுண்டு.

39. தினசரி சந்தை மற்றும் பேருந்து நிலையத்தில் டீ மற்றும் காபி கடைகள் வைக்கக்கூடாது. அதற்கு ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு-360-ன்படி உரிம ஆணை வழங்கப்படமாட்டாது இதனை மீறி உரிமதாரர் டீ மற்றும் காபிக்கடை வைத்தால் அவை மறு அறிவிப்பின்றி உடனே அப்புறப்படுத்தப்படும்.

40. நிர்ணயிக்கப்பட்ட இடங்களுக்கு மேல் கூடுதலாக ஆக்கிரமிப்பு செய்யும் வியாபாரிகளின் வியாபாரப் பொருட்களை அகற்றி ஏலத்தில் விடப்படும்.

41. அரசாங்கம் உரிமம் சம்பந்தமாக அவ்வப்போது வெளியிடும் விதிகளை உரிமதாரர் ஏற்று செயல்படுத்த கடமைப்பட்டவராவார்.

42. மாநகராட்சி மூலம் ஏலம் விடப்படும் இனங்களுக்கு ஏலத் தொகையில் 2.244% வருமானவரிச் சட்டம் 1961 பிரிவு 206C (I.C)-ன்படி உரிமதாரர் வருமானவரி செலுத்த வேண்டும். வருமான வரி கணக்கு எண் இல்லாத ஏலதாரர்களிடம் 20% வருமான வரி பிடித்தம் செய்யப்படும்.

43. **(அ)** மத்திய மாநில அரசுகளால் அவ்வப்போது விதிக்கப்படும் சேவை வரி, வரி மற்றும் கட்டணங்களை உரிமதாரரே செலுத்தக் கடமைப்பட்டவராவார்.

44. சிலம்பரான் குட்டை காமராஜ் மாநகராட்சி தினசரி சந்தை,ஈ.கே.எம். அப்துல்கனி சந்தை, ஆடுவதை செய்யுமிடம் ஆகியவற்றிற்கு பாதுகாவலர்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள் வருமாறு:-

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஆடுவதை செய்யுமிடம் | : | துப்புரவுத் தொழிலாளிகள் | 2 |
| 2. | ஆடுவதை செய்யுமிடம் | : | காவலர் | 1 |
| 3. | ஈ.கே.எம்.அப்துல் கனி சந்தை | : | துப்புரவுத் தொழிலாளிகள் | 2 |
| 4. | நேதாஜி தினசரி சந்தை | : | துப்புரவுத் தொழிலாளிகள் | 8 |
| 5. | பேருந்து நிலையம் (பேருந்து நிலைய நுழைவுக்கட்டணவசூல்) | : | துப்புரவுத் தொழிலாளிகள் | 10 |

45. மாநகராட்சி திட்டங்கள் செயல்படுத்தும்போது உரிமத்திற்கு விடப்பட்ட இடம் மற்றும் சம்மந்தப்பட்ட பகுதிகள் மாநகராட்சிக்கு தேவைப்படுமாயின் குத்தகைதாரர் மேற்படி இடத்தை எவ்வித நிபந்தனையுமின்றி உடன் ஒப்படைக்க வேண்டும்.

அ) மாநகராட்சி திட்டங்கள் செயல்படுத்தும்போது அபிவிருத்திப்பணிகள் உரிமம் விடப்பட்ட இடத்தில் மேற்கொள்ளப்படுமாயின் உரிமதாரருக்கு இழப்பு ஏற்பட நேர்ந்தால் சரியான முறையில் ஆய்வு செய்து இழப்பு ஏற்பட்டுள்ளது கண்டறியப்பட்டால் விகிதாச்சாரப்படி இழப்பீட்டுத்தொகை உரிமதாரருக்கு வழங்கப்படும்.

## *சிறப்பு நிபந்தனைகள்*

### 1 வைஸ்சேர்மன் டி.வீரபத்திர ரோட்டிலுள்ள சுதந்திர தின வெள்ளி விழா பேருந்து நிலையத்திற்கு வந்து போகும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்

**உரிமக் காலம் : 01.04.2017 முதல் 31.03.2020 முடிய**

துப்புரவு பணியாளர்கள் ஊதியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.11,86,250/-
காப்புத் தொகை ரூ. 1,00,000-

**இட விபரம்**

வார்டு ஏ பிளாக் 14 டி.எஸ். நெ. 1, 3 சத்தியமங்கலம் ரோட்டிற்கும் தெற்கு, வார்டு ஏ பிளாக் 14 டி.எஸ். நெ. 6, 7, 9 இவைகளுக்கு மேற்கு, வார்டு ஏ பிளாக் 13 டி.எஸ்.நெ. 63, 64 இ.வி.என். ரோட்டிற்கும், வார்டு ஏ பிளாக் 15 டி.எஸ்.நெ. 4-க்கும் கிழக்கு, வார்டு ஏ பிளாக் 15 டி.எஸ்.நெ. 1, 2, 3, 4, 25, 36 மற்றும் வார்டு ஏ பிளாக் 14 டி.எஸ்.நெ. 12, 13-க்கு வடக்கு இவைகளின் மத்தியில் வார்டு ஏ பிளாக் 14 டி.எஸ்.நெ. 2, 4, 5 மற்றும் 8 ஆகும் (வார்டு எண். 12)

## சிறப்பு நிபந்தனைகள்

பேருந்து நாள் ஒன்றுக்கு கட்டணம் ரூ. 15.00 (ரூபாய் பதினைந்து மட்டும்)

1. பேருந்து நிறுத்த எல்லைக்குள் சேகரிக்கப்படும் குப்பை, சாணி வகையறாக்களில் உரிமதாரருக்கு யாதொரு உரிமையும் இல்லை.

2. பேருந்து நிறுத்தத்திலுள்ள காலியிடங்களை உரிமதாரர் வாடகைக்கு விடக்கூடாது.
3. பேருந்து நிலையத்தில் ஆணையர் அனுமதியில்லாமல் யாதொரு கொட்டகையும் உரிமதாரர் போடக்கூடாது. அல்லது மற்றவர் போட்டுக் கொள்ளவும் அனுமதிக்கக் கூடாது.
4. பேருந்து நிலையத்தில் மாநகராட்சி உபயோகத்திற்கு போகும் ஜீப் மற்றும் கார் அல்லது லாரிகளுக்கு கட்டணம் வசூல் செய்யக் கூடாது. இதர ஆட்டோ ரிக்ஷா, டாக்சி, வேன், ஜீப், லாரிகளை கண்டிப்பாக உள்ளே அனுமதிக்கக் கூடாது.
5. வசூல் செய்ய வேண்டிய கட்டணங்களைக் காட்டும் அறிவிப்பு பலகை தயார் செய்து, அதை எல்லா மக்களுக்கும் தெரியும்படியான இடத்தில் வைக்க வேண்டும்.
6. சுகாதாரம் அல்லது மற்ற ஏற்பாடுகளில் உரிமதாரர் தலையிடக்கூடாது.
7. பேருந்து நிலையத்தினை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பேணப்பட வேண்டும். மேலும் ஆணையாளர், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு பேருந்து நிலையம் சுகாதாரமற்ற நிலையில் உள்ளது கண்டறியப்பட்டால் குத்தகை உரிமத்தினை ரத்து செய்யப்படும்.
8. பேருந்து நிலையத்தில் எந்த காரணத்தைக் கொண்டும் நெருப்புக் கொளுத்தக் கூடாது.
9. பேருந்து நிலையத்தில் உள்ள கட்டிடங்களில் உரிமதாரருக்கு யாதொருவிதமான உரிமையும் இல்லை. மேற்கு கட்டிடங்களில் பிரயாணிகள் தங்குவதற்கு (Waiting shed) ஆகவும், பிரயாணிகளுக்கு டிக்கட் கொடுக்க புக்கிங் ஆபீஸ் (Booking Office) ஆகவும் உபயோகப்படுத்திக் கொள்ளவோ அல்லது வேறுவிதமாக உபயோகப்படுத்திக் கொள்ளவோ மாமன்றத்திற்கு அதிகாரமுண்டு.
10. பிச்சைக்காரர்கள், வேடிக்கை காட்டுபவர், அனுமதியற்ற வகையில் அல்லது தலையில் தட்டு அல்லது கூடை வைத்து வியாபாரம் செய்பவர்கள் பேருந்து நிலையத்திற்குள் அனுமதிக்கக்கூடாது.
11. பேருந்து நிலையத்தில் போடப்பட்டிருக்கும் எலக்டிரிக் கம்பங்கள், லைன்கள், விளக்குகள் இவைகளை உரிமதாரர் சரிவர இருக்கிறதா என்பதை கவனித்து வர வேண்டும். மாநகராட்சி லைனிலிருந்து தனியாக சர்வீஸ் கனெக்சன் எடுக்கக்கூடாது.
12. ஆணையர் உத்தரவின்றி யாதொரு கொட்டகைகளும் ஆக்கிரமிப்பும் உரிமதாரர் செய்யக்கூடாது. வேறு ஒருவரும் ஷெட்டு, பந்தல் முதலியன ஆணையர் உத்தரவின்றி போடாமல் பார்த்துக் கொள்வதும், அப்படி ஆக்கிரமிப்பு ஏதாவது ஏற்பட்டால் அதை உடனே அப்புறப்படுத்துவதும் உரிமதாரர் பொறுப்பாகும்.
13. பேருந்து நிலையத்தினுள் உள்ள காலியிடத்தில் எக்காரணத்தைக் கொண்டும் எந்தவிதமான ஓலைக் கொட்டகைகள் அல்லது வில்லைக் கொட்டகைகள், பெட்டிக் கடைகள் வைக்க உரிமதாரர் அனுமதிக்கக் கூடாது. தனியார் யாரும் கைவண்டி, தள்ளுவண்டி முதலியவைகளில் பலகாரமும், இனிப்பு மற்ற இதரப் பொருட்களை விற்பனைக்கு கொண்டு வர அனுமதிக்கக்கூடாது. அவ்வாறு மீறி ஏதாவது இருந்தால், அவைகளை மாநகராட்சி அலுவலர்கள் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி அப்புறப்படுத்துவார்கள்.
14. பேருந்து நிலையத்திற்குள் ஆணையர் அனுமதியின்றி எவ்விதமான விளம்பரங்களும் செய்ய உரிமதாரர் அனுமதிக்கக்கூடாது.
15. பேருந்து நிலையத்தில் தினசரி வந்து போகும் பேருந்துகளுக்கு தற்பொழுது வசூலிக்க வேண்டிய கட்டண விகிதம் நடப்பு நிதி ஆண்டில் அரசு ஆணையின் பேரில் உயர்த்த நேரிட்டால், உரிமதாரர் விகிதாச்சார அடிப்படையில் உயர்வு செய்யப்படும் உரிமம் தொகையை மாநகராட்சியில் செலுத்திவிட வேண்டும். தவறினால் உரிமம் ரத்து செய்யப்பட்டு, உயர்த்திய கட்டணப்படி மறு ஏலத்தில் விடப்படும். இந்த வகையில் இழப்பீடு கேட்கவோ அல்லது வேறு எந்த வகையில் சலுகை கோரவோ உரிமதாரருக்கு உரிமம் கிடையாது.
16. பேருந்து கட்டணத்தினை உரிமதாரர் பேருந்து உரிமையாளர்களிடம் தன் சொந்த பொறுப்பில் வசூல் செய்து கொள்ள வேண்டும்.
17. அரசாங்கம் உரிமம் சம்பந்தமாக அவ்வப்போது வெளியிடும் விதிகளை உரிமதாரர் ஏற்று செயல்படுத்த கடமைப்பட்டவராவார்.

## 2 முதல் 6 வரை - மிதிவண்டி மற்றும் இரண்டு சக்கர மோட்டார் வாகனங்கள் நிறுத்துமிடங்கள்

பேருந்து நிலையத்தில் புதிய வணிக வளாக செல்லார் இரு சக்கர வாகன நிறுத்துமிடங்கள், மினி பேருந்து நிலைய செல்லார் இரு சக்கர வாகன நிறுத்துமிடம், வி.சி.டி.வி. ரோடு, ஆர்.கே.வி. ரோடு தினசரி அங்காடி பகுதியில் இரு சக்கர வாகன நிறுத்துமிடம் மற்றும் நேதாஜி சாலை வணிக வளாக செல்லார் பகுதி இரு சக்கர வாகன நிறுத்துமிடங்களில் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம்.

**உரிமக் காலம் : 01.04.2017 முதல் 31.03.2020 முடிய**

| | |
|---|---|
| ஒவ்வொரு இனத்திற்கும் மின்சார டெபாசிட் தொகை | ரூ. 5,000- |
| பேருந்து நிலைய மிதிவண்டி நிலைய காப்புத் தொகை | ரூ. 10,000- |
| மற்றவைகளுக்கு காப்புத்தொகை | ரூ. 2,000- |

## சிறப்பு நிபந்தனைகள்

1. சைக்கிள் நாள் ஒன்றுக்கு கட்டணம் ரூ. 3.00
2. இரண்டு சக்கர மோட்டார் வாகனங்களுக்கு ரூ. 7.00
3. நான்கு சக்கர மோட்டார் வாகனங்களுக்கு ரூ. 5.00 (பேருந்து நிலையம்)

1. பேருந்து நிலைய மிதிவண்டிகள் நிலையம் 24 மணிநேரமும் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் திறந்திருக்கவேண்டும்.
2. உரிமதாரர்கள் கட்டணம் வசூல் செய்வதற்கு தங்கள் சொந்த செலவில் ஆணையர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டபடி அச்சு பற்றுச்சீட்டு கொடுக்க வேண்டும். மேற்படி பற்றுச்சீட்டுகள் பயன்படுத்துவதற்கு முன் அவைகள் மாமன்ற முத்திரையிடப்பட வேண்டும். அச்சு பற்றுச்சீட்டுகள் புத்தக எண், தொடர்எண், வசூலிக்கப்படும் கட்டணம் முதலியவைகள் கொண்டதாகவும் இருக்க வேண்டும். பற்றுச்சீட்டு கொடுக்காமல் தொகை வசூல் செய்தால், ஏல உரிமம் எவ்வித அறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும். உரிய கட்டண விபரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டு அறிவிப்பு பலகை வைக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் மட்டுமே வசூலிக்கப்பட வேண்டும். கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட்டது குறித்து புகார் பெறப்படின் உரிய சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும். முதல்முறை கூடுதல் கட்டணம் வசூலிப்பது கண்டறியப்பட்டால் ரூ. 1000/- அபராதமும், இரண்டாவது முறை புகார் பெறப்பட்டு எடுக்கப்படும் நடவடிக்கைக்கு ரூ.5000/-மும் அபராதம் விதிக்கப்படும். இரண்டுமுறைக்கு மேல் புகார் பெறப்பட்டால் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு ஏல உரிமம் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் அவரால் கட்டப்பட்டுள்ள வைப்புத்தொகையும் பறிமுதல் செய்யப்படும். இவ்விதம் ரத்து செய்யப்படும் ஏலத்திற்கு ஏற்படும் நிதியிழப்பிற்கு மாநகராட்சி எவ்விதத்திலும் பொறுப்பேற்காது. இழப்பீடு எதுவும் மாநகராட்சியால் ஏல உரிமதாரருக்கு வழங்கப்பட மாட்டாது.
3. மின்கட்டணத்தினை உரிமதாரரே செலுத்த வேண்டும்.
4. மிதிவண்டி நிலையத்தில் நுழைவுச்சீட்டு பெற்று நிறுத்தப்படும் வாகனங்களை பாதுகாக்க வேண்டியது உரிமதாரர் சொந்த பொறுப்பாகும். வாகனங்கள் திருட்டு போகும் பட்சத்தில் உரிமதாரர்தான் பொறுப்பாவார். இவர் வாகனத்திற்குண்டான இழப்புத்தொகையை வாகன உரிமையாளருக்கு வழங்க வேண்டும். மாநகராட்சி எவ்வித பொறுப்பும் ஏற்காது.
5. மாநகராட்சி சொத்துக்கள் சேதமின்றி பராமரிக்கப்படவேண்டும்.
6. மின்வசதி மற்றும் இதர வசதிகளை உரிமதாரரே செய்து கொள்ள வேண்டும். பொது வேலை நிறுத்தம் மற்றும் வேறு காரணங்களினால் மிதிவண்டி நிலையம் செயல்படாமல் இருக்கும் காலத்திற்கு, உரிமத்தொகையைக் குறைக்கவோ நஷ்ட ஈடு கோரவோ உரிமதாரருக்கு உரிமையில்லை.
7. 2016-2019ம் ஆண்டு பொது மற்றும் சிறப்பு ஏல நிபந்தனைகள் இதற்கும் பொருந்தும்.
8. அரசாங்கம் உரிமம் சம்பந்தமாக அவ்வப்போது வெளியிடும் விதிகளை உரிமதாரர் ஏற்று செயல்படுத்த கடமைப்பட்டவராவார்.

## 7 கட்டணக்கழிப்பிடங்கள்

**உரிமக் காலம் : 01.04.2017 முதல் 31.03.2020 முடிய**

பேருந்து நிலையத்தில் பிளாட்பாரம்-2,3 & பிளாட்பார எண்கள் 5,6,7 மற்றும் பன்னீர் செல்வம் பூங்கா, பிரப்ரோடு கட்டணக் கழிப்பிடம் ஆகியவற்றில் உள்ள கழிப்பிடங்கள் மற்றும் குளியல் அறைகள் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

குரங்குக்குட்டை கட்டணக் கழிப்பிடங்களில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம்.

1. மின்சார வைப்புத் தொகை - ரூ. 10,000-
2. காப்புத்தொகை - ரூ. 25,000-

**1. கழிப்பிடங்கள் மற்றும் குளியல் அறைகளில் கீழே கண்டுள்ளபடி கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும்.**

1. சிறுநீர் கழிக்க ரூ. 0.50 பைசா
2. மலம் கழிக்க ரூ. 1.00
3. குளியல்அறைக்கு ரூ. 3.00

2. பேருந்து நிலைய கட்டண கழிப்பிடங்கள் மற்றும் குளியல் அறை 24 மணிநேரமும் பொதுமக்கள் உபயோகத்திற்கு திறந்து வைத்திருக்க வேண்டும். இதர கட்டண கழிப்பிடங்களை தினசரி காலை 5.30 மணி முதல் இரவு 10.00 மணி முடிய திறந்து வைத்திருக்க வேண்டும். குழாயில் தண்ணீர் வசதி,மின்விளக்கு வசதி போன்றவற்றை உரிமதாரர் பொறுப்பில் குறைவின்றியும் புகார்களுக்கு இடமளிக்காத வகையில் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருக்கவேண்டும். கழிப்பிடங்கள் துப்புரவாக வைத்திருக்க உரிமதாரரே ஏற்பாடுகள் செய்து கொள்ளவேண்டும். தண்ணீர் கழிப்பிட உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். வேறு உபயோகத்திற்கு பயன்படுத்தக்கூடாது.

3. ஏலம் உறுதி செய்யப்பட்ட உடனே உரிமத்தொகை முழுவதையும் செலுத்த வேண்டும். அத்துடன் மின்சார வைப்புத் தொகை ரூ. 10000- மற்றும் காப்புத் தொகை ரூ.25000- செலுத்த வேண்டும்.

4. கழிப்பிடங்களில் மாநகராட்சியால் பொருத்தப்பட்டிருக்கும் கம்ப்ரசர் மற்றும் மின்மோட்டர்களை நல்லமுறையில் பராமரிக்கப்படவேண்டும் அவைகள் பழுதுபட்டால் உரிமதாரர் சொந்தப்பொறுப்பில் பழுதுபார்த்துக்கொள்ள வேண்டியது. அதற்காக மாநகராட்சி ஏதும் பொறுப்பு ஏற்காது. உரிம காலம் முடிந்தவுடன் கம்ப்ரசர் மற்றும் மின் மோட்டார்கள் நல்லமுறையில் திருப்பி ஒப்படைக்கவேண்டும் மின்கட்டணங்கள் உரிமதாரரே செலுத்தி வரவேண்டும்.

**5. கட்டண கழிப்பிடங்களை பராமரிப்பதில் ரசீது கொடுக்கப்படாமல் கட்டணம் வசூலித்தாலோ, கூடுதல் கட்டணம் வசூலித்தாலோ, சுத்தம் மற்றும் சுகாதாரவசதிகள் சரிவர பேணப்படாமல் இருந்தாலோ, மேலும் நிபந்தனைகள் மீறப்பட்டதாக கண்டறியப்பட்டாலோ, உரிமம் ரத்து செய்யப்படும்.**

6. மாநகராட்சி சொத்துகளுக்கு சேதமின்றி பராமரிக்கப்பட வேண்டும்.

7. உரிமதாரர் தொகை வசூல் செய்வதற்கு தங்கள் சொந்த செலவில் ஆணையர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டபடி அச்சு ரசீது கொடுக்க வேண்டும். சரியானபடி ரசீது கொடுக்காமல் தொகை வசூல் செய்யக்கூடாது. மேற்படி ரசீதுகள் பயன்படுத்துவதற்கு முன் அவைகள் மாமன்ற முத்திரையிடப்படவேண்டும். அச்சு ரசீதுகள் புத்தக எண்,தொடர்எண்,வசூலிக்கப்படும் கட்டணம் முதலியவைகள் கொண்டதாகவும் இருக்க வேண்டும். மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு மேல் கூடுதல் கட்டணம் ஏதும் வசூலிக்கக் கூடாது. தவறினால் உரிமம் ரத்து செய்யப்படும். வைப்புத்தொகைகள் பறிமுதல் செய்யப்படும். உரிமதாரர் இழப்பீடு கோருவதற்கு எவ்வித உரிமையும் இல்லை.

8. மின்சாரம் தடைப்பட்டாலோ, பொதுவேலை நிறுத்தம் மற்றும் வேறு காரணங்களினாலோ, கட்டண கழிப்பிடங்கள் செயல்படாமல் இருக்கும் காலத்திற்கு உரிமத் தொகையிலிருந்து கழிவு கோரவோ, இழப்பீடு கோரவோ உரிமதாரருக்கு உரிமையில்லை. மின்வசதி மற்றும் இதர வசதிகளை உரிமதாரரே செய்து கொள்ள வேண்டும்.

9. மாநகராட்சி அனைத்து கழிப்பிடங்களில், அனைத்து ஒட்டுநர் மற்றும் நடத்துநர்கள் இலவசமாக பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்.

10. கட்டணக்கழிப்படங்களில் நச்சு தொட்டிகள்(Septic tank) நிறைந்துவிட்டால் அதனை உரிமதாரரே அதாவது சொந்த செலவிலேயே கழிவுகளை அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும்.

11. 2016-2019-ம் ஆண்டின் பொது மற்றும் சிறப்பு ஏல நிபந்தனைகள் இதற்கு பொருந்தும்.

12. கட்டண கழிப்பக உரிமதாரர் மார்ச் 10-ம் தேதிக்குள் மலக்குழியினை மாநகராட்சி கழிவு நீர் வாகனத்தின் மூலமாக உரிய கட்டணம் செலுத்தி சுத்தம் செய்து காலியாக வைத்து இருக்க வேண்டும். தவறினால் மாநகராட்சியால் சுத்தம் செய்யப்பட்டு அதற்கான கட்டணத்தை ஏலதாரர் செலுத்திய வைப்புத் தொகையிலிருந்து ஈடு செய்யப்படும்.
14. அரசாங்கம் உரிமம் சம்பந்தமாக அவ்வப்போது வெளியிடும் விதிகளை உரிமதாரர் ஏற்று செயல்படுத்த கடமைப்பட்டவராவார்.

## 8 மாநகராட்சி பேருந்து நிலையத்தில் பூ வியாபாரம் செய்து கொள்ளும் உரிமம்

**உரிமக் காலம் : 01.04.2017 முதல் 31.03.2020 முடிய**

**காப்புத்தொகை ரூ.5000-**

1. இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள 4x4 சஅடி திறந்தவெளி இடத்தை மட்டும் உபயோகித்துக் கொள்ளவேண்டும்.
2. மேற்படி இடத்தில் நிரந்தர அல்லது தற்காலிக கூரைகள் ஏதும் ஏற்படுத்தக்கூடாது.
3. பயணிகளுக்கு எவ்வித இடைஞ்சல்கள் ஏற்படுத்தக்கூடாது.
4. பூக்கடையைச் சுற்றி அனுமதிக்கப்பட்ட 4x4 ச.அடி அளவுக்கு கூடுதலாக ஆக்கிரமிப்புகள் ஏதும் ஏற்படுத்தக்கூடாது.
5. பூக்கடை கழிவுகளை ஒரு கூடையில் வைத்து, கடைக்காரர் அவ்வப்பொழுது அப்புறப்படுத்த வேண்டும்.
6. 2016-2019ஆம் ஆண்டின் பொது மற்றும் சிறப்பு ஏல நிபந்தனைகள் இதற்கும் பொருந்தும்.
7.அரசாங்கம் உரிமம் சம்பந்தமாக அவ்வப்போது வெளியிடும் விதிகளை உரிமதாரர் ஏற்று செயல்படுத்த கடமைப்பட்டவராவார்.

## 9. ஈரோடு மாநகராட்சி ஆடு வதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்

**உரிமக் காலம் : 01.04.2017 முதல் 31.03.2020 முடிய**

| | |
|---|---|
| மின்சாரக் கட்டணத்திற்காக பொறுப்புத் தொகை | ரூ.10000/- |
| காப்புத் தொகை | ரூ.25000/- |

கழிவுநீர்த் தொட்டி சுத்தம் செய்யும் வாகனம் பராமரிப்புக் கட்டணம் ரூ.2,00,000/-

**இட விபரம்**

வார்டு 'இ' பிளாக் 20 டி.எஸ்.நெ. 119 ஜீவானந்தம் ரோட்டிற்கு கிழக்கு, வார்டு 'இ' பிளாக் 16 டி.எஸ்.நெ. 9, 12 இவைகளுக்கு மேற்கு, வார்டு 'இ' பிளாக் 16 டி.எஸ்.நெ. 7-க்கு தெற்கு வார்டு 'இ' பிளாக் 16 டி.எஸ்.நெ. 13-ல் உள்ள நிலவியல் தடத்திற்கு வடக்கு இவைகளுக்கு மத்தியில் வார்டு 'இ' பிளாக் 16 டி.எஸ்.நெ. 8 மற்றும் 93 (வார்டு 43).

## சிறப்பு நிபந்தனைகள்

| | | |
|---|---|---|
| 1. | ஆடுவதை செய்யுமிடம் ஆடு ஒன்றுக்கு | ரூ.25.00 |
| 2. | ஆடுவதை செய்யுமிடம் கோழி ஒன்றுக்கு | ரூ. 5.00 |

1. மாநகராட்சி ஆடுவதை செய்யுமிடத்தில் நிறுவப்பட்டுள்ள (Stunner Gun) மயக்க நிலை ஏற்படுத்தும் இயந்திரம் மூலம் ஆடுவதை செய்யுமிடத்திற்கு வரும் ஆடுகளை மயக்கமடைய செய்து அதன் பின்னர் ஆடுகளை அறுக்க வேண்டும்.

2. ஆடுவதை செய்யுமிடத்தில் மின்சாரக் கட்டணத்தை உரிமதாரரே செலுத்த வேண்டும்.

3. **16.01.1976-ஆம் தேதிய 45-ம் எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணையின்படி மகாவீர் முக்தி அடைந்த நாள், திருவள்ளுவர் நாள், கடலூர் ராமலிங்க அடிகள் நினைவு நாள் மற்றும் மகாத்மா காந்தி பிறந்த தினம் ஆகிய நாட்களில் ஆடுவதை இடங்கள், ஆடு இறைச்சி கொட்டகைகள் மற்றும் இறைச்சி விற்பனை நிலையங்கள் ஆகியவைகளை மூடி விட வேண்டும். இதற்காக மாமன்றம் எவ்வித இழப்பீடும் கொடுக்காது.**

4. கால்நடை மருத்துவரால் அங்கீகரிக்கப்படாததும், மாமன்றத்தால் இதற்காக ஏற்படுத்தியிருக்கும் சீல் வைக்காததுமான கால்நடைகளை அறுப்பதற்கு உரிமதாரர் இடம் கொடுக்கக் கூடாது. அவைகளை எடுத்துக் கொண்டு போகவும் கூடாது.

5. கால்நடைகளை வதை செய்யும் இடங்களை தவிர வேறு இடங்களில் கொல்லப்பட்டால் ஆணையர் அவர்களின் பார்வைக்கு உரிமதாரர் கொண்டு வர வேண்டும். மேலும் ஆணையாளர் அவர்களின் உத்தரவைப் பெற்ற உரிமதாரர் தம் சொந்த செலவிலேயே சீல் இல்லாத ஆடுகளை பறிமுதல் செய்து, மாநகராட்சி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். மதக் கொள்கை சம்பந்தமாக வதை செய்யும் கால்நடைகளுக்கு கட்டணம் வசூல் செய்யவோ அல்லது கேட்கவோ உரிமதாரருக்கு உரிமையில்லை.

6. ஆடுவதை செய்யும் இடங்களில் அரசால் பயிற்சி அளிக்கப்பட்டவர் மட்டுமே தோல் உரிக்க அனுமதிக்கப்பட வேண்டும். இதற்கு உரிமதாரரே பொறுப்பாவார்.

7. 2013-2016-ம் ஆண்டின் பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகள் இதற்கும் தக்கவாறு பொருந்தும்.

8. அரசாங்கம் உரிமம் சம்பந்தமாக அவ்வப்போது வெளியிடும் விதிகளை உரிமதாரர் ஏற்று செயல்படுத்த கடமைப்பட்டவராவார்.

9. ஆடுவதை கூடத்தை துர்நாற்றம் இல்லாமல் சுத்தமாகவும், ஈ மொய்க்காமல் வைக்கப்பட வேண்டும்.

(அ) இரண்டு துப்புரவு பணியாளர்களுக்கு குறைவில்லாமல் உரிமதாரரே தன் சொந்த செலவில் பணியாளர்களை நியமித்து ஆடுவதைக் கூடத்தை சுத்தமாக பராமரிக்கப்பட வேண்டும்.

10. ஆடு வதை செய்யும் கருவிகள் சுகாதார முறைப்படி சுத்தமாக பயன்படுத்த வேண்டும்.

11. ஆடுவதை செய்யும் நபர்கள் பலவீனமாக இருத்தல் கூடாது. ஏனெனில் இவர்கள் தொற்றுநோய்க்கும், கிருமிகட்கும் எளிதில் பாதிக்கப்படுவார்கள்.

12. ஆடுவதை கூடத்தில் ஆடுவதை செய்யும் நபர்கள் அடிக்கடி மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு, தகுதி சான்றிதழ் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

13. ஆடுவதை செய்யும் நபர்களுக்கும், இறைச்சியை விற்பனைக்கு வெளியே எடுத்துச் செல்பவருக்கும் அடையாள அட்டை முறைப்படி வழங்கப்பட வேண்டும். மேலும் இறைச்சிகளுக்கு மெட்டல் சீல் வைக்கப்பட வேண்டும்.

14. ஆடு வதைக் கூடத்தில் இரவு நேரங்களில் ஆடுகளை வதை செய்யக் கூடாது.

15. ஆடுகளை வதை செய்ய 24 மணி நேரத்திற்கு முன் ஆடுகளை ஆடுவதை கூடத்தில் வைத்து முறைப்படி பராமரிக்கப்பட வேண்டும்.

16. ஆடுவதை கூடத்திற்கு தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட ஆடுகள், பலவீனமான ஆடுகள், இறந்த ஆடுகள் மற்றும் விபத்தில் இறந்த ஆடுகள் ஆகியவைகளை கண்டிப்பாக ஆடுவதைக் கூடத்தில் அனுமதிக்கக் கூடாது.

17. ஆடுவதை செய்யும் ஒவ்வொரு ஆடும் கால்நடை மருத்துவர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் (Antemortem Examination). ஆடுவதை சாலையில் 24 மணி நேரமும் போதுமான தண்ணீர் வசதி இருக்க வேண்டும்.

18. கால்நடை மருத்துவரால் நிராகரிக்கப்படும் ஆடுகளை உடனே ஆடுவதைக் கூடத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும். ஆடுவதை செய்யப்பட்ட பின்னரும் இறைச்சி கால்நடை மருத்துவரால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் (Postmortem Examination).

19. ஆடுவதைக் கூடத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லும் இறைச்சியை சுகாதார முறைப்படி அமைக்கப்பட்ட பெட்டிகளின் மூலம் பறவைகளிடமிருந்து பாதுகாப்பாக எடுத்துச் செல்ல வேண்டும்.

20. மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ஆடு இறைச்சி விற்பனை செய்யப்படும் இடங்களில் எவ்வித காரணத்தினாலும் ஆடுகளை வதை செய்யக் கூடாது. அவ்வாறு வதை செய்வதை நிர்வாகம் மற்றும் பொதுமக்கள் புகார் மூலம் கண்டறிந்தால் அந்த கடையின் உரிமம் ரத்து செய்யப்படும். மேலும் இறைச்சியை பறிமுதல் செய்யப்படும்.

21. மாநகராட்சி நகர்நல அலுவலர் அவர்களின் அவ்வப்போது அறிவுரையின்படி ஆடுவதைக் கூடத்தை பராமரிக்கப்பட வேண்டும். ஆடுவதை செய்யப்படும் இடம் ஈ மொய்க்காதவாறும் (Fly proof) எலி புகாதவாறும் (Rat proof) அமைக்கப்பட வேண்டும்.

மாநகராட்சி அலுவலகம், ஈரோடு
அ1/160/2016 நாள்.09.01.2017

(ஒம்.) மு. சீனி அஜ்மல்கான்,
ஆணையாளர்,
ஈரோடு மாநகராட்சி.

## உரிமதாரர் உறுதிமொழி

ஈரோடு மாநகராட்சியால் வெளியிடப்பட்டுள்ள 2017-2020-ம் ஆண்டுக்கான ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏல விளம்பர நிபந்தனைகளின் நகல் பெற்றுக் கொண்டு அதைப் படித்துப் பார்த்து, ஏலம் நடத்தும் அலுவலரால் படிக்க கேட்டு ஏல நிபந்தனைகளையும் மாநகராட்சியின் சட்ட திட்டங்களையும், நன்கு தெரிந்து கொண்டேன். அனைத்து நிபந்தனைகளுக்கு உட்பட்டு நான் நடந்துகொள்ள சம்மதிக்கின்றேன். தவறினால், மாநகராட்சிக்கு ஏற்படும் இழப்பிற்கு, நானே பொறுப்பாவேன் என்று இதன் மூலம் முழுமையாக சம்மதிக்கிறேன் என உறுதி கூறுகிறேன்.

உரிமதாரர் கையொப்பம்.

**சாட்சிகள்:**

1)

2)